17.07.2025

OS. No. 170/2013

**DW 1 – ஆண்டி**

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-**</u>

முதல் பிரதிவாதியினுடைய செயலாளராக நான் பணியாற்றினேன் என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதியின் தலைவராக ஆரம்பத்திலிருந்தே ஒருவர்தான் இருந்தார் என்றால் சரிதான். அறக்கட்டளை லாப நோக்கமின்றி பொது சேவையை நோக்கமாக கொண்டது என்றால் சரிதான். தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருக்கு அறக்கட்டளையிலிருந்து எந்தவொரு ஊதியமும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் அறக்கட்டளைக்கு வரக்கூடிய லாபத்தில் எங்களுக்கு பங்கு இல்லை என்றால் சரிதான். அறக்கட்டளை விதிகளின்படி பொருளாளர், தலைவர் மற்றும் செயலாளர் அனுமதியின்றி தனிப்பட்ட முறையில் செயலாற்ற முடியாது என்றால் சரிதான், ஆனால் அவர் செயலாற்றினார். அவ்வாறு அவர் தன்னிச்சையாக செயல்பட்டபோது அதை செயலாளர் என்ற முறையில் நான் கண்டித்தேனா என்றால், அவர் தன்னிச்சையாக செயல்பட்டது எனக்கு தெரியவில்லை. அறக்கட்டளை நிர்வாகத்தில் என்ன நடக்கிறது என்பது தெரியாமல் நிர்வாகம் பார்த்தேனா என்றால் சரியல்ல. சொந்த பணத்தை ட்ரஸ்டில் போடுவதும், ட்ரஸ்டில் இருந்து சுயலாபத்திற்காக பணத்தை எடுப்பதும் தவறு என்றால், சொந்த பணத்தை ட்ரஸ்டில் போடுவது தவறில்லை, பணம் எடுக்கக்கூடாது. சொந்த பணத்தை ட்ரஸ்டிற்கு கடனாக கொடுக்கக்கூடாது என்றால் சரியல்ல, கடனாக கொடுக்கவில்லை. நான் பணம் கொடுத்தது கடனா, நன்கொடையா என்றால் கடன்தான். 2006-ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் முப்பத்தி இரண்டு இலட்சம் ரூபாய் நான் கடனாக கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2006-ஆம் ஆண்டு கொடுத்த தொகைக்கு இன்றுவரை வட்டியோ அசலோ எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. 15.09.2006-இல் தேனா வங்கியிலிருந்து அறக்கட்டளைக்கு ரூபாய் அறுபத்து எட்டு லட்சம் கடன் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். அதற்கு நான் தனிப்பட்ட ஜாமீன் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என்னுடைய சொத்து ../

ஐம்பத்தேழு லட்சம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீண்டும் 08.08.2008–ஆம் தேதி அதே வங்கியில் மூனு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் கடன் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த கடனுக்கும் தனிப்பட்ட ஜாமீன் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்திலும் என்னுடைய சொத்து ஐம்பத்தேழு லட்சம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீண்டும் அக்டோபர் 2011–இல் ஒன்பது கோடியே எழுபத்து ஐந்து லட்சம் வங்கியில் கடன் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த கடனுக்கும் நான் தனிப்பட்ட ஜாமீன் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என்னுடைய சொத்து மதிப்பாக ஐந்து கோடியே பதினான்கு லட்சம் என்று காண்பித்துள்ளேன் என்று சொன்னால் அது தவறு, அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் உள்ளது. என்னுடைய வருமான வரி கணக்கை பார்த்தால் என்னுடைய தனிப்பட்ட வருமானம் எவ்வளவு என்பது தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றாலும், தொழில் எதுவும் இல்லை என்றாலும், அறக்கட்டளையினுடைய பணத்தை நான் சொந்த உபயோகத்திற்காக எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. 2005 ஆம் ஆண்டு இமயம் காலேஜ் ஆப் எஜுகேசன் என்ற  கல்லூரியை B.Ed. படிப்பிற்காக ஆரம்பித்தேன் என்றால் சரிதான். அதற்கு உயர்கல்வித்துறை அனுமதி அளித்தது என்றால் சரிதான். அந்த கல்லூரி ஆரம்பிப்பதற்கு ஐந்து ஏக்கர் பத்து சென்ட் நிலம் கொடுக்கப்பட்டதாக உத்தரவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஐந்து ஏக்கர் பத்து சென்ட் நிலம் என்பது சர்வே எண்.202/3 பி, 202/3 சி, 202/5, 202/6 மற்றும் 205/2 அடங்கியுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தானது நானும் பெரிய அண்ணனும் எழுதிக்கொடுத்த 08.09.2005–ஆம் தேதியிட்ட ஆவணத்தின்படி அறக்கட்டளைக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் அந்த ஆவணத்தின் பத்து ஏக்கர் இருபத்தேழு சென்ட் தானமாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆரம்பித்தோமா என்றால் ஆரம்பித்தோம். அதற்கும் அரசு அனுமதி வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆரம்பிப்பதற்கு கட்டிடம் கட்டுவதற்கான நிலத்தை சர்வே எண்.205/1 ஏ, 206/1 மற்றும் 206/2 ஜி ஆகிய நிலத்தை காட்டியுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. கல்லூரி ../

ஆரம்பிப்பதற்கு முறைகேடாக நிலத்தை காட்டிவிட்டு தற்போது தெரிந்துவிட்டதால் அது தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அறக்கட்டளைக்காக பெறப்பட்ட மொத்த நிலத்தின் அளவு எண்பத்தேழு ஏக்கர் அறுபது சென்ட் என்றால் சரிதான். அறக்கட்டளை சார்பாக விவசாய கல்லூரி ஒன்று ஆரம்பித்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கல்லூரி ஆரம்பிப்பதற்கு 110 ஏக்கர் இடத்தை காண்பித்துதான் அனுமதி வாங்கினோம் என்றால் சரிதான், சொந்த இடத்தை கூடுதலாக அறக்கட்டளைக்கு குத்தகைக்கு கொடுத்து அனுமதி பெற்றோம். எங்கள் அறக்கட்டளை சார்பாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், ஒரு எம்.சி.ஏ. படிப்பும் ஆரம்பித்தோம் என்றால் சரிதான். எங்கள் அறக்கட்டளை சார்பாக ஒன்பது கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதில் தற்போது ஆறு நிறுவனங்கள் இயங்கி வருகிறது. விவசாய கல்லூரியை தவிர்த்து மற்ற கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு அறக்கட்டளையின் பேரில் உள்ள எண்பத்தேழு ஏக்கர் அறுபது சென்ட் நிலத்தை காண்பித்துதான் அனுமதி பெற்றோம் என்றால் சரிதான். விவசாய கல்லூரிக்கு 43 ஏக்கர் குத்தகை நிலம் காண்பித்துள்ளோம் என்றால், எவ்வளவு ஏக்கர் நிலம் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. கல்லூரி ஆரம்பிப்பதற்கு தேவையான நிலத்தை காண்பித்துள்ளோம். விவசாய கல்லூரி ஆரம்பிக்க கொடுக்கப்பட்ட அனுமதி உத்தரவில் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்து எண்பத்தேழு ஏக்கர் என்றும், குத்தகை நிலம் 43 ஏக்கர் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே, பல கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு காண்பித்த அதே நிலமான எண்பத்தேழு ஏக்கர் நிலத்தை விவசாய கல்லூரி ஆரம்பிப்பதற்கும் காட்டி மோசடியாக அனுமதி பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பில் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.